கொடுத்திருக்கின்ற பிரச்சினைக்கு பதில் சொல்வதென்றால், மத்திய அரசாங்கத்திடமிருந்துதான் பதில் கேட்டு வாங்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை. இல்லை. இதையெல்லாம் செய்ய முடியாது. உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) நான் மத்திய அரசிடமிருந்து பதில் கேட்டு வாங்க வேண்டும். இதையெல்லாம் செய்ய முடியாது. தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு) இந்த அவையினுடைய நேரத்தை வீணாக்காதீர்கள். உட்காருங்கள்.

(உ) திருவள்ளூர் தொகுதி, இலட்சுமிவிலாசபுரத்தில் மணல் அள்ளுவதைத் தடை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. வி.ஜி. ராஜேந்திரன், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருவாலங்காடு பகுதியில் உள்ள இலட்சுமிவிலாசபுரம் என்ற கிராமத்தில், கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே அரசே மணல் அள்ளுவதாக அங்கு பொதுமக்கள் கூடி கிட்டத்தட்ட ஒரு வார காலமாக போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்னிடம் கொடுத்துள்ள அறிவிப்பில் என்ன கொடுத்திருக்கிறீர்களோ, அதை மட்டும் சொல்லுங்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *அதைத்தான் சொல்கிறேன். தயவு செய்து அரசு முன்வந்து அதைத் தடை செய்து, விவசாய மக்களைக் காப்பாற்ற வேண்டும். ஏனென்றால் விவசாயிகள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கொடுத்திருக்கின்ற அறிவிப்பை நான் துறைக்கு பதிலுக்காக அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள்.*

(ஊ) திண்டுக்கல் மாவட்டம், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் பாலை ஆவின் நிறுவனமே கொள்முதல் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள்.*

2018 ஜூன் 7]

***திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு உட்பட்ட தேவத்தூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்; அதேபோல, வாகரை ஊராட்சிக்கு உட்பட்ட பூசாரிகண்டன்வலசு, மரிச்சலம்பு ஊராட்சிக்குட்பட்ட பூலாம்பட்டி போன்ற பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில், கடந்த 2, 3 நாட்களாக விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பாலைக் கொள்முதல் செய்யாமல் மறுக்கிறார்கள். அதற்கு காரணம் கேட்டால், தற்சமயம் பால் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. ஆகவே கொள்முதல் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். ஏனென்றால், இங்கேயிருக்கின்ற அம்பத்தூர், மாதவரத்தில் வாகனங்களில் வருகின்ற பாலை இறக்கமுடியாமல் வாகனங்கள் வரிசையாக இருக்கின்றன. எனவே, தற்சமயம் பால் கொள்முதல் செய்ய முடியாது என்று சொல்கின்ற காரணத்தால், விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே விவசாயிகள் அந்தப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு பாலை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, கூட்டுறவுச் சங்கத்திற்கு விவசாயிகள் கொண்டுவரும் பாலை அரசு கொள்முதல் செய்ய வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் பால் வழங்கும் உறுப்பினர்களாக உள்ள 5,076 பால் உற்பத்தியாளர்களிடமிருந்து நாளொன்றுக்கு 65,000 லிட்டருக்குமேல் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆவின் நிறுவனம் அனைத்து விவசாயிகளிடமிருந்து பாலைக் கொள்முதல் செய்கின்றது. உறுப்பினர் குறிப்பிட்ட பகுதியில் வழக்கத்திற்கு மாறாக கூடுதலாக அனுப்பப்பட்ட பாலில், தேவையான இதர சத்துகள் எட்டுக்கும் குறைவாக இருக்கின்ற காரணத்தால், அத்தகைய சத்துக் குறைவான பாலைக் கொள்முதல் செய்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அனைத்து விவசாயிகளுடைய நலனைக் கருத்தில்கொண்டு சங்கங்களிலிருந்து பெறப்படும் அனைத்துப் பாலையும் ஆவின் நிறுவனமே கொள்முதல் செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கடந்த 5-6-2018 அன்று 33.48 இலட்சம் லிட்டர் பாலும், நேற்று*

6-6-2018 அன்று 33.71 இலட்சம் லிட்டர் பாலும், இதுவரையில்லாத அதிக அளவாக கொள்முதல் செய்யப்பட்டு, அனைத்து விவசாயிகள் நலனை ஆவின் நிறுவனம் பாதுகாத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

(எ) விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. அய்யாக்கண்ணு கைது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன செய்தியை தங்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பொதுவாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கென்று ஓர் அறை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த அறை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூடுவதற்கும், பேசுவதற்கும் மட்டுமல்ல; பாதிக்கப்பட்டவர்கள், அரசாங்கத்திடம் ஏதேனும் உதவி பெற விரும்புபவர்கள்கூட அங்கு வந்து சந்தித்து மனு கொடுப்பார்கள். இது வாழையடி வாழையாக நடந்துவருகிற விஷயம்தான். அதேபோல், இன்று விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. அய்யாக்கண்ணு அவர்கள், எதிர்க்கட்சித் தலைவரைப் பார்க்க விரும்பினார்கள். எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் 12 மணிக்கு சந்திப்பதற்கு நேரம் கொடுத்திருந்தார். அதற்காக வந்த திரு. அய்யாக்கண்ணு அவர்களை போலீஸ்காரர்கள் மடக்கிப் பிடித்து, எதிர்க்கட்சித் தலைவரைச் சந்திக்கவிடாமல் செய்ததோடு மட்டுமல்லாமல், அவரை அழைத்துக் கொண்டு போய் வடபழனி காவல் நிலையத்தில் வைத்திருக்கிறார்கள். இது என்ன நியாயம் என்று புரியவில்லை. விவசாயிகள் சங்கத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவரைப் பார்க்க வருகிறார். குறைகள் சொல்லிவிட்டுப் போவார். அந்தக் குறைகளில் நியாயம் இருந்தால் நாங்கள் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப் போகிறோம். இல்லாவிட்டால், நாங்களும் அமைதியாக இருக்கப் போகிறோம். இப்படி எதிர்க்கட்சித் தலைவரைப் பார்க்க வந்தவரை, பார்க்கவிடாமல் வழியிலே பிடித்து, அடித்து—இல்லை, அடிக்கவில்லை மடக்கிப் பிடித்து. . .* (சிரிப்பு)